[1978 செப்டம்பர் 8

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

* வினா எண் 96—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தையும் தனித்தனி நிர்வாக அமைப்பாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இந்த வினாவிற்கு இடமில்லை.

[முற்பகல் 10-00]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, மாவட்ட அளவிற்கு இப்போது ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் நிர்வாக அமைப்புகளின்கீழ் வருகின்றன. வட மாநிலங்களில் இருக்கின்ற ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் தனித் தனி நிர்வாக அமைப்பாகச் செயல்பட்டு வருகின்றன என்று கேள்விப்படுகிறோம். அந்தக் கொள்கையினை ஏற்று இந்த அரசும் ஒவ்வொரு ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தையும் தனித்தனியான நிர்வாக அமைப்பின்கீழ் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, பஞ்சாப் போன்ற மாநிலங்களிலே ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் தனித்தனியாக உள்ள நிர்வாக அமைப்புகளின்கீழ் செயல்பட்டு வருகின்றன. ஆனால் இன்று இருக்கக்கூடிய சட்டம் அதாவது 1959-வது ஆண்டின் சட்டப்பிரிவின் கீழே எந்த உட் பிரிவுகளையும் அமைப்பதற்குரிய அதிகாரம் இல்லை. ஆகவே 1959-வது ஆண்டின் சட்டத்தை மீண்டும் திருத்தம் செய்து அதற்குப் பின்னாலே இது பற்றி யோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கேரள மாநிலத்திலிருந்து தேக்கு மரங்கள் வாங்கல்

* வினா எண் 97—திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொள்ளாச்சி மரம் அறுக்கும் தொழிற்சாலைக்கு கேரள மாநிலத்திலிருந்து மரங்கள் வரவழைக்கப்படுகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள மரங்கள் வரவழைக்கப்படுகின்றன ?

1978 செப்டம்பர் 8]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) ஆம்.

(ஆ) கடந்த சில ஆண்டுகளில் வாங்கப்பட்ட தேக்கு மரங்களின் சுமாரான மதிப்பு—

1974—75ல்	ரூ. 6, 42, 000
1975—76ல்	ரூ. 3, 69, 000
1976—77ல்	ரூ. 31, 000
1977—78ல்	ரூ. 6, 89, 000
1978– 79ல் (15. 6. 78 முடிய)	ரூ. 9, 67, 000

திரு. கே. பண்ணை சேதுராம் : பேரவைத் தலைவரவர்களே, தேக்கு மரங்களின் ஃபினிஷ்ட் குட்ஸ்-கள் வேறு மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றனவா? அப்படி அனுப்பப்படுவதால் லாபம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, மூலக் கேள்வி தேக்கு மரங்கள் வாங்கப்படுகின்றனவா என்பது, வாங்கப்படுகிறது என்பது அதற்குப் பதில் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நமது மாநிலத்தில் தேக்கு மரங்கள் பற்றுக்குறை இருக்கின்ற காரணத்தினுல் தேக்கு மரங்களை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் தீவிர திட்டங்கள் ஏதாவது வைத்திருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, தேக்கு மரங்கள் வளர்ப்பதற்கு நீர் வளம், மலை வளம் ஆகியன இருக்க வேண்டும். எனவே தமிழகத்திலே தேக்கு மரங்களை அதிக அளவில் வளர்ப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்கின்ற வனத்துறையைப் பற்றிய கேள்வியை தொடர்புடைய அமைச்சரிடம் கேட்டு விடை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பொ. சிகாமணி : பேரவைத் தலைவரவர்களே, கேரளாவில் தேக்கு மரங்களின் ரேட் எந்த முறையில் நிர்ணயிக்கப்படுகின்றன என்பது பற்றி விவரம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, பொது ஏல முறையின் மூலமாக இவைகளுக்கான விலைகள் நிர்ணயம் செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.